## கிறிஸ்து பிறப்புக் காலம் - டிசம்பர் 25
## ஆண்டவருடைய பிறப்பு பெருவிழா

## இரவுத் திருப்பலி

**எசா 9, 1- 7, தீத் 2, 11 - 14, லூக் 2, 1 – 14**

### முன்னுரை

பனி படர்ந்து கிடந்த ஒரு இரவில் ஒரு தந்தையும் மகனும் கிறிஸ்து பிறப்பு இரவுத் திருப்பலிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அந்த சிறுவன் தந்தையை பார்த்து கேட்டான், "அப்பா ஏன் இந்த இருட்டில் செல்ல வேண்டும்? காலையில் வெளிச்சம் வந்தவுடன் போகலாமே?" என்று. அதற்கு அந்த தந்தை சிரித்துக் கொண்டே சொன்னார், " மகனே, இருட்டில் தான் வெளிச்சம் அதிகமாக தேவைப்படுகிறது; முதல் கிறிஸ்து பிறப்பும் ஒரு இரவில் தான் நிகழ்ந்தது". அதனால்தான் அன்பானவர்களே நாம் இந்த இரவில் ஆலயத்திற்கு வந்திருக்கிறோம்.

முதல் கிறிஸ்து பிறப்பானது இன்னிசை பாடல்கள் இசைக்க, தீபங்களின் வெளிச்சத்தில் நிகழவில்லை. அது யாரும் நினைத்துப் பார்க்க முடியாத உலகின் ஒரு மூலையில், வறுமையின் மத்தியில், மங்கலான வெளிச்சத்தில் இடம்பெற்றது. மாளிகைக்கு பதிலாக மாட்டுத் தொழுவமும், தொட்டிலுக்கு பதிலாக தீவனத் தொட்டியுமே இருந்தது. அச்சத்தில் உறைந்து போன அன்னை மரியாளும், உலகத்தின் உன்னதமான மறைபொருளை மனத்தில் தாங்கிக் கொண்டு, துவண்டு போயிருந்த யோசேப்பும் தான் இருந்தார்கள். இந்த இரவில் தான் விண்ணகத்தின் ஒளி மண்ணகத்தே உதித்தது.

ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பும், தனது விடியலை உலகிற்கு அறிவிக்க, இறைவன் இன்றும் இருளை தேர்ந்து கொள்கிறார் என்பதை தான் நமக்கு நினைவூட்டுகிறது. இறைவன் அனைத்தும் நன்றாக இருக்கும் போது வருவதில்லை. மாறாக, இதயங்கள் சோறும் போது, குடும்பங்கள் போராட்டங்களில் சிக்கித் தவிக்கின்ற போது, இந்த உலகமே நிலையற்றதாகத் தோன்றும் போது, கனிவாக நம் காதோரம் சொல்கிறார்: "அஞ்சாதே, மாபெரும் மகிழ்ச்சி தரும் நற்செய்தியை நான் உனக்கு கொண்டு வந்துள்ளேன்".

இந்தப் புனிதமான கொண்டாட்டத்தில் பங்கேற்கும் நாம், தீபங்கள் ஏற்றி பாடல்கள் பாடுவது மட்டுமல்லாமல் நம்முடைய குழப்பங்கள், ஏமாற்றங்கள் நம் உள்ளத்தை சூழ்ந்திருக்கும் கார் மேகங்கள், அனைத்தையும் இந்த குடிலின் முன் இறக்கி வைப்போம். நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பதைப் போல இருளில் வாழ்ந்த மக்கள்தான் ஒளியின் மேன்மையை உணர்வார்கள். அன்று இடையர்கள் கண்கூடாக கண்டதை நாமும் காணவும், அன்னை மரியாள் தன் இதயத்தில் வைத்து தியானித்ததை நாமும் உணரவும், அனைத்தையும் மாற்றக்கூடிய இறைவன் நமது வாழ்வையும் நலமானதாக மாற்றுவார் என்ற நம்பிக்கையையும், இறைவன் இத்திருவழிபாட்டின் வழியாக நமக்கு அருள மன்றாடுவோம். ஏனென்றால் இன்று இறைவனின் ஒளி நம்மிடையே சுடர்கிறது.

### மறையுரை

**"அனைத்தையும் மாற்றும் ஒரு குழந்தை - இன்று உலகில் ஒளி உதித்துள்ளது"**

பல வருடங்களுக்கு முன்பாக, கிறிஸ்து பிறப்பு இரவில், ஜெர்மனி நாட்டில் உள்ள ஒரு சிற்றூரில் சிறுவன் ஒருவன் தன் தந்தையுடன் இரவு திருப்பலிக்கு சென்று கொண்டிருந்தான். வழியெல்லாம் இருள் சூழ்ந்து இருந்தது. மஞ்சு மூட்டங்களுக்கு மத்தியில் ஆங்காங்கே சில மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. திடீரென அந்தச் சிறுவன் தந்தையை பார்த்து கேட்டான், "அப்பா ஏன் இந்த இருட்டில் நாம் கோயிலுக்கு செல்ல வேண்டும்? காலையில் வெளிச்சம் வரும் வரை நாம் காத்திருக்கக் கூடாதா? அந்தத் தந்தை சிரித்துக்

கொண்டே சொன்னார்: " ஏனென்றால் மகனே, இருட்டில் தான் வெளிச்சம் அதிகமாக தேவைப்படுகிறது; கிறிஸ்து பிறப்பும் ஒரு இரவில் தான் நிகழ்ந்தது, அதனால் தான்."

இருளில் ஒளி சுடர்கிறது. இதுதான் கிறிஸ்து பிறப்பு. இது நிகழ்வதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இதை அறிந்திருந்த எசாயா இறைவாக்கினர் கூறுகின்றார் " காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்". ஏசாயா இறைவாக்கினர் இதனை அறிவித்த போது எருசலேம் நகரில் விழாக்கோலம் கிடையாது. அசீரிய நாட்டுப் படை அவர்களை சூழ்ந்து இருக்க, எங்கு பார்த்தாலும் அச்சமும், இரத்த கறைகளும், குழப்பமும் நிலவியது. இத்தகைய பயம் நிறைந்த சூழலில் தைரியமாக அறைகூவல் விடுக்கிறார் இறைவாக்கினர் எசாயா: " ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்". இதே உண்மையை, இறைவன் ஒரு அமைதியான இரவில் பெத்லகேம் ஊரில் மென்மையான குரலில் கூறுகிறார்: " ஒரு குழந்தையின் பிறப்பில் நம்பிக்கை பிறக்கிறதென்று".

### 1. நமது இருளில் ஒளிரும் விளக்கு

ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவையும் வண்ண விளக்குகளாலும் நட்சத்திரங்களாலும் அலங்கரிக்கிறோம். இது வெறும் அலங்காரமட்டுமல்ல, இருள் என்றும் வெல்லாது என்ற அறிவிப்பும் கூட. இந்த அறிவிப்பு நமது உலகத்திற்கு இன்றும் தேவைப்படுகிறது. கணணியும், கை தொலைபேசியும் நம்மைச் சூழ்ந்திருந்தாலும் பரிதவிப்பும், போரும், பேராசையும், தனிமையும் நிறைந்த காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். எப்போதும் இல்லாத அளவிற்கு எசாயா இறைவாக்கினரின் வார்த்தைகள் இன்றைக்கு உண்மையுள்ளதாக இருக்கிறது. வீரர்களின் அணிவகுப்பையும், இரத்தக்கரை தோய்ந்த ஆடைகளையும் நாம் காண்கின்றோம். பயத்தின் நிழலில் நடக்கும் மனிதர்களுடைய காலடி ஓசையையும் இன்றைக்கும் நாம் கேட்கின்றோம். இந்த சூழ்நிலையிலும் கடவுள் கூறுகிறார்: "காரிருளில் நடக்கும் மக்கள் பேரொளியை காண்பார்கள்". இந்தப் பேரொளி ஒரு கொள்கையோ, திட்டமோ அல்ல; மாறாக அது ஒரு குழந்தை. அந்த குழந்தையின் திருப்பெயரோ "வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்" என்பதாகும்.

### 2. என்றோ அல்ல – இன்று

வானகதூதர் இடையர்களுக்கு சொன்னது "**இன்று** உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்". என்றோ ஒரு நாள் பிறப்பார் என்றல்ல, அல்லது இந்த உலகம் சற்று திருந்தும் போதும் என்றல்ல. மாறாக **இன்று**. காலகாலமாக காத்திருந்த, இறைவாக்கினர்கள் மற்றும் இஸ்ராயேல் மக்களின் ஏக்கம், **இன்று,** என்ற ஒரு சிறு வார்த்தையில் நிறைவேறுகிறது. இந்த வார்த்தை இயேசுவின் வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது. " இந்த இறைவாக்கு **இன்று** நிறைவேறிட்டு"(மத் 4: 21), என்று அவர் நாசரேத்துர் தொழுகைக் கூடத்தில் இருந்த மக்களை பார்த்து கூறினார். சக்கேயுவிடம், " **இன்று** இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" (லூக் 19, 2) என்றார். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளியை பார்த்து "நீர் **இன்று** என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக் 23, 43) என மொழிந்தார். இறைமகன் இயேசு பேசும் ஒவ்வொரு தருணமும் அந்த நேரத்தில் அந்த இடத்திற்கு மீட்பை கொணர்கின்றது. எனவே கிறிஸ்து பிறப்பு என்பது கடந்த கால ஒரு நிகழ்வை மட்டும் நினைத்துப் பார்ப்பதல்ல, மாறாக அது தொடர்ந்து நடைபெறும் ஒரு அற்புதமான நிகழ்வு. அது முன்னொரு நாளில் பெத்லகேம் ஊரில் நடந்த ஒரு நிகழ்வு மட்டும் அல்ல, மாறாக இன்றும், இப்போதும் நடக்கின்ற ஒரு செயல். **இன்று** உங்களுக்காகவும், எனக்காகவும், ஒரு மீட்பர் பிறந்துள்ளார்.

### 3. குழந்தை அனைத்தையும் மாற்றும்

பெற்றோர்களைப் பார்த்து கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள் ஒரு குழந்தை வருகை அனைத்தையும்

புரட்டிப் போட்டு விடுகின்றது: தூக்கம் மறைகிறது, வாழ்வின் முன்னுரிமைகள் மாறுபடுகின்றன, வீட்டில் சத்தமும் சந்தடியும் ஏற்படுகின்றது, ஆனாலும் ஒரு தெய்வீகமகிழ்ச்சி மலர்கிறது என்று. ஒரு இளம் தந்தையைப் பார்த்து ஒரு முறை கேட்டேன், "தந்தை என்ற பொறுப்பு உங்களை எவ்வாறு மாற்றியது?" என்று. "எனக்கு ஒரு குழந்தை பிறக்கும் வரை நான் எவ்வளவு சுயநலக்காரன் என்பது எனக்கு தெரியவில்லை" என்றார் அவர். இது உண்மை அல்லவா? கட்டாயத்தினால் அல்ல, மாறாக அன்பினால், ஒருவரின் வாழ்வையே மாற்றி அமைத்து விடுகின்றது ஒரு குழந்தை. அதுபோலவே இறைவனும் இந்த உலகை, படை பலத்தாலோ அல்லது தனது கட்டளைகளாலோ அல்லாமல், தனது அன்பால், குடிலில் எழும் ஒரு குழந்தையின் குரலால் மாற்றுகிறார். இந்த குழந்தைதான் வளர்ந்து பின்னாளில் உங்கள் பகைவர்களையும் அன்பு செய்யுங்கள் என்று சொல்லி சிலுவையில் தன் இரு கரங்களையும் விரித்து அதை வாழ்ந்தும் காட்டியது. அதனால் தான் தூய பவுல் அடிகளும் தீத்துக்கு எழுதிய கடிதத்தில் "மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது" (தீத் 2:11) என்று குறிப்பிடுகிறார். இந்த அருளுக்கு பெயர் தான் இயேசு. எவ்வாறு அன்பு செய்ய வேண்டும் என்பதை மறந்த இந்த உலகத்திற்கு, அளவற்ற அன்பை இந்தக் குழந்தை இயேசு கொடுக்கிறார். அவர் தீர்ப்பிடுவதற்காக அல்ல மாறாக மீட்பதற்கு வருகிறார். குறைவில்லா வாழ்வை வேண்டுபவராக அல்ல, மாறாக மன்னிப்பை வழங்குகிறவராக வருகிறார். இந்த இறைக் குழந்தை உண்மையிலேயே அனைத்தையும் மாற்றுகின்றது.

### 4. அருளுக்கும் மாட்சிக்கும் இடைப்பட்ட வாழ்க்கை

தூய பவுல் நமக்கு வேறுஒன்றை நினைவுபடுத்துகின்றார். ஆண்டவரின் முதல் வருகைக்கும் இரண்டாவது வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம்; அதாவது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட அருளுக்கும், இனி வெளிப்பட இருக்கும் மாட்சிமைக்கும் இடையில். நமது குடும்பங்களில் சமாதானம் உண்டாவதற்காக, நமது உள்ளங்களில் ஏற்பட்ட காயங்கள் ஆறுவதற்காக, இந்த உலகில் அமைதி நிலைபெறுவதற்காக நாம் இன்னும் காத்துக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்து மீண்டும் வருவதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த காத்திருப்பு என்பது சோம்பேறித்தனம் அல்ல. இறையருள், ஒரு மாறுபட்ட வாழ்க்கை வாழ்வதற்கு நம்மைப் பயிற்றுவிக்கிறது. இதைத்தான் தூய பவுல் அழகாக குறிப்பிடுகின்றார்: "நாம் இறை பற்றின்மையையும் உலகு சார்ந்த தீய நாட்டங்களையும் மறுத்துக் கட்டுப்பாடுடனும் நேர்மையுடனும் இறை பற்றுடனும் இம்மையில் வாழ இவ்வாருளால் பயிற்சி பெறுகிறோம்". வேறு விதமாக சொல்ல வேண்டும் என்றால் ஒரு குழந்தை அனைத்தையும் மாற்றுகிறது. அது உங்களையும் மாற்றட்டும்.

அவரது கனிவு உங்களது கடினமான வார்த்தைகளையும் கனிவுள்ளதாக்கட்டும்.

அவரது தாராள குணம் உங்கள் சுயநலத்தை போக்கட்டும்.

அவரது அமைதி உங்கள் உள்ளங்களில் நடக்கும் போராட்டங்களை சாந்தப்படுத்தட்டும்.

எனவே நாம் காத்திருப்பது சோம்பேறித்தனத்தினால் அன்று, மாறாக ஒரு நோக்கத்திற்காக.

### 5. இந்த நாள் இன்றைக்கும் நடக்கலாம்

ஜெர்மனி நாட்டில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை ஒரு அருள் தந்தைய என்னுடன் பகிர்ந்து கொண்டார். கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு முந்திய நாள் மாலை, ஒரு தம்பதியர் தனியாக, ஏமாற்றத்துடன் வீட்டில் இருந்தார்கள். அவர்களுக்கு குழந்தை இல்லை. அவரது மனைவி எவ்வளவு கூறியும் அவர் நம்பிக்கையற்றவராக இருந்தார். அந்த நேரத்தில்

அவர்களுக்கு வந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை அவர் புரட்டிக் கொண்டிருந்தபோது "இன்று உங்களுக்காக ஒரு மீட்பர் பிறந்துள்ளார் "என்ற வாசகத்தை கண்டார். அது அவரது உள்ளத்தைத் தொட்டது. அந்த இரவு நேரத்தில் அவர் பங்கு தந்தையிடம் சென்று நான் இந்த ஆலயத்தில் சிறிது நேரம் அமரலாமா என்று கேட்டார். அவர் குடிலுக்கு முன்பாக ஒரு மணி நேரம் செலவிட்டார். அங்கிருந்து வந்த போது அவரது முகம் மலர்ந்திருந்தது. அவருக்குள் இருந்த இருள் மறையவில்லை, ஆனால் ஒளி அவருக்குள் உதித்திருந்தது. கிறிஸ்து பிறப்பு விழா இதை தான் செய்ய முடியும். அது இருளை அழிப்பதில்லை, மாறாக அதை ஒளிர்விக்கிறது.

### 6. இருளில் இருந்து ஒளிக்கு

இந்தக் குழந்தை நம் இதயங்களை குடும்பங்களை சமூகங்களை ஆட்சி செய்தால் எசாயா இறைவாக்கினரின் வார்த்தைகள் மீண்டும் சாத்தியமாகும். நம்மை அழுத்தும் நுகத்தடி முறிக்கப்படும். கிறிஸ்து நம் உள்ளத்தை ஆளும்போது, அகந்தை அமைதிக்கு வழி விடுகிறது, நமது இல்லங்களை ஆளும்போது, மனக்கசப்புக்கள் மன்னிப்பாக மலர்கிறது. மக்களை ஆளும் போது சுயநலம் பொதுநலமாக மாறுகிறது . உலகை ஆளும்போது வாளும் கலப்பையாக மாறுகிறது. இந்த குழந்தையைப் பார்த்து நாமும் மன்றாடுவோம்: எங்கள் வாழ்வை ஆளும் பொறுப்பை நீ ஏற்க வா. ஏனென்றால் ஆட்சியின் பொறுப்பு, அரசர்களையோ தலைவர்களையோ, அதிகாரத்தையோ, செல்வங்களையோ நம்பி அல்ல, மாறாக அமைதியின் அரசரான உம்மையே சார்ந்துள்ளது.

### 7. அழியாத பரிசு

கிறிஸ்து பிறப்பு விழாகாலங்களில் நமக்கு கிடைக்கும் பரிசு பொருள்கள் உடைந்து போகலாம், இனிப்புகள் மறைந்து போகலாம். ஆனால் இயேசு கிறிஸ்து என்னும் பரிசு எப்போதும் மறைந்து போவதில்லை, ஆற்றலை இழப்பதில்லை. நாம் தொலைக்க முடியாத ஒரே பரிசு அவர் மட்டும் தான். ஒரு கிறிஸ்து பிறப்பு பாடல் கூறுவதைப் போல காரிருளில் கடுங்குளிரில் இருக்கும் எனக்கு நீதான் சூரியனாக ஒளியாக மகிழ்ச்சியாக இருக்கிறீர். அதே ஆதவன், இந்த இரவும் உதிக்கிறார். கடவுளின் அருள் வெளிப்படுகிறது. காரிருளில் நடந்த மக்கள் பேரொளியை காண்கிறார்கள். ஒரு குழந்தை அனைத்தையும் மாற்றுகிறது.

### இறுதியாக

ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சிற்றூருக்கு, முதல் முறையாக மின்னிணைப்பு வழங்கப்பட்டது. மின் விளக்குகள் எரிவதை பார்க்கக் கூடிய மக்கள், அதைக் கண்டு மிகவும் வியந்தார்கள். ஒரே நொடியில் இருள் மறைந்தது. ஒரு பாட்டி, ஒளி வந்துவிட்டது என்று பாட ஆரம்பித்தார். அன்பிற்குரியவர்களே, அதுதான் கிறிஸ்துமஸ்: ஒளி வந்துவிட்டது, அது நம்மிடையே ஒளிர வந்துள்ளது.

இன்று குடிலின் முன் மண்டியிட்டு வேண்டும்போது ஒன்றை நினைவில் கொள்வோம்: நாம் காண்பது ஒரு குழந்தையை மட்டுமல்ல மாறாக உலகின் ஒளியை. மனித உருவில் வந்த கடவுளின் அருளை. இன்று உங்களுக்காகவும், எனக்காகவும் மீட்பர் பிறந்துள்ளார்.

ஆமென்.

**தயாரிப்பு :**

**அருள் முனைவர் பால் ஜூலியன், ஆஸ்திரேலியா**

**மேலும் விவரங்களுக்கு காண்க....**

**www.virginofrevelationaustralia.com**